## திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு. து.கணேஷ்மூர்த்தி., எம்.,ஏ.,பி.எட்.,

நக.எண்.13898/அ1/2022 நாள்: .12.2022

பொருள்: பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி – திருவண்ணாமலை மாவட்டம் – அரட்டவாடி, அரசு மேல்நிலைப்பள்ளி, இளநிலை உதவியாளர் திரு. த. அரிதாஸ். என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு

பார்வை:

1. அரசாணை எண்.191/பொதுத் துறை நாள்01.02.1962
2. அரசுக் கடிதம் எண். 6483/73-3 பொது நாள்:30.07.1983
3. சென்னை - 3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD – 12/2020 நாள்:21.07.2020
4. திருவண்ணாமலை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5534/அ1/2020 நாள்:17.09.2020
5. செங்கம், மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.3482/அ1/2022 நாள்:15.09.2022

*************

திருவண்ணாமலை மாவட்டம், அரட்டவாடி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. த.அரிதாஸ் என்பாருக்கு பார்வை (3) இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு செயலாளர் அவர்களின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை (4) காணும் திருவண்ணாமலை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக நியமனம் அளிக்கப்பட்டு 21.09.2020 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டிய கருத்துவினை பார்வை (5) இல் காணும் செங்கம் மாவட்டக்கல்வி அலுவலரின் பரிந்துரை அடிப்படையில் இவ்வலுவலகம் பெறப்பட்டது.

பார்வை (1) மற்றும் பார்வை (2) இல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படியும், பார்வை (5) இல் காணும் செங்கம் மாவட்டக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையிலும் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

முதன்மைக்கல்வி அலுவலர்,

திருவண்ணாமலை.

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர் (தலைமையாசிரியர் மூலமாக)

நகல் - தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, அரட்டவாடி.

சம்பந்தப்பட்டவருக்கு சார்பு செய்யப்பட்டது

தலைமை ஆசிரியர்,
அரசினர் மேல்நிலைப் பள்ளி.
அரட்டவாடி - 606 709.
திருவண்ணாமலை மாவட்டம்